**பாதஹேவாஹெட பிரதேச சபை - 2023**

------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாதஹேவாஹெட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்கள் அடங்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பாதஹேவாஹெட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின போது உடன்படிக்கைகள் மேற்கொண்டிருக்காத கூட்டுத்தொகை ரூபா 2,000,000 இற்கான 04 அபிவிருத்தி செயற்திட்டங்கள் கடன்கொடுத்தோரின் கீழ் பிழையான முறையில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) | முன்னைய ஆண்டின் பண்டக் கணிப்பீட்டினால் அழிக்கப்பட்ட ரூபா 71,461 இற்கான ஆயுள்வேத இருப்பொன்று மற்றும் ரூபா 6,980 தொகை பெறுமதியான பொதுக் களஞ்சிய இருப்பொன்று மீளாய்வாண்டின் செலவொன்றென நாட்குறிப்பு இலக்கம் 39 மற்றும் 41 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவு ரூபா 78,441 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டில் சரியாக கணக்கீடு அகற்றப்பட்ட பண்டங்கள் செய்யப்பட வேண்டும். சீராக்கல் செய்யப்பட்டது என. |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்களின் மீதிகள் துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் இணக்கஞ் செய்யும் போது ரூபா 750,541 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 ஜனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,017,525 இற்கான தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் பௌதீக ரீதியாக உளமை மற்றும் பண்டக் கணிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்காத காரணத்தினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது. | வித்தியாசத்தை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்களின் உளமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 22(1) | காணி துணைப் பகிர்வுக்கு ஈடுபடுத்தவுள்ள காணியின் விசாலத்தில் 10 சதவீதத்தை குறையான அளவொன்று சனசமூக மற்றும் களியாட்ட அலுவல்களுக்காக பொருத்தமான இடங்களில் இருந்து ஒதுக்கிக் கொள்ளவேண்டிய போதிலும் சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த 935 பர்சஸ் காணியில் 422.4 பர்சஸ் காணி கருங்கல் உடனான தரைப்பாகமாக மற்றும் சரிவான பொது அலுவல்களுக்கு பொருத்தமில்லாத காணிப் பகுதியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட காணிப் பகுதி பொது அலுவல்களுக்கு அல்லது ஆக்கபூர்வமான அலுவல் ஒன்றிற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொது அலுவல்கள் மேற்கொள்ளப்படவில்லை என. | குறிப்பிட்ட காணி குறிக்கோள் சார் கருமங்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| **(ஆ)** | **துணைச் சட்டங்கள்** | | | |
| | 2022 நவம்பர் 18 திகதிய 2307 இலக்கங் கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முச்சக்கர வண்டி நிறுத்தி வைத்தல் தொடர்பான துணைச் சட்டம் | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள முச்சக்கர வண்டி தரிப்பு இடங்களிலிருந்து 2015 முதல் 2022 வரை ரூபா 5,348,350 தொகைகளை அறவிடப்பட வேண்டிய முச்சக்கர வண்டிக் கட்டணத்தை அறவீடு செய்திருக்கவில்லை. | எழுத்துமூலம் மற்றும் வாய்மொழிமூலம் அறிவிக்கப்பட்டது என. | துணைச் சட்ட ஏற்பாடுகளின் படி கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | 2012 முதல் 2021 காலம் தொடர்பாக காலவதியான ரூபா 3,555,969 இற்கான 82 பொது வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கங் கொண்ட பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 11 வாகனங்கள் 2019 - 2021 ஆண்டுகளின் பின்னர் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. | அடுத்த வருடத்தில் மேற்கொள்ளப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 51,610,991 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 43,900,990 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 3,158,720 | 3,214,764 | 3,940,584 | 4,018,045 | 3,151,936 | 3,359,800 | 5,889,272 | 4,743,865 |
| ii. | வாடகை | 7,750,000 | 7,564,223 | 7,700,410 | 1,309,705 | 2,475,925 | 6,674,473 | 6,625,282 | 1,445,891 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,501,365 | 4,459,415 | 5,065,965 | 5,348,350 | 2,203,765 | 2,400,556 | 1,762,856 | 5,554,900 |
| iv. | ஏனைய வரு மானங்கள் | 148,841,018 | 144,974,143 | 94,577,722 | 140,030,873 | 51,043,879 | 51,923,098 | 58,256,724 | 89,634,452 |
| | மொத்தம் | 163,251,103 | 160,212,545 | 111,284,681 | 150,706,973 | 58,875,505 | 64,357,927 | 72,534,134 | 101,379,108 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி வரியும் வரியும்** | | |
| (i) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா | ஆதனங்களை தடை செய்வதன் மூலம் அறவீடு | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்து |

| | | | |
|---|---|---|---|
| | 3,376,325 தொகையாக காணப்பட்டதுடன், ஒரு அலகின் வீதவரி நிலுவை ரூபா 10,000 இனை மிகைத்த 55 ஆதனங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,717,669 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானம் அறவீடு செய்ய வேண்டும். |
| (ii) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 06 அரச நிறுவனங்கள் காணப்படுகின்ற 34 ஆதனங்களுக்காக 01 வருடத்திற்கு 18 இற்கும் இடைப்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற ரூபா 676,604 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | அரச நிறுவனங்களை அறிவுருத்தப்பட்டது என. | வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (iii) | 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் பெறுமதி மதிப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் பந்தி 20 இற்கு இணங்க வீதவரி ஆதனங்கள் 5 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 2009 ஆண்டின் பின்னர் புதிய பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிய தரப்பினர் அறிவுருத்தப்பட்டது என. | புதிய பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக் கொண்டு அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 641,721 இற்கான ஏக்கர் வரி மீதி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறிவுருத்தல் மேற்கொள்ளப்பட்டது என. | வரி அறவீடு செய்யப்பட வேண்டும். |
| **(ஆ)** | **கடை வாடகை** | | |
| | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 1,309,705 தொகை காணப்பட்டதுடன், 2019 ஆண்டு முதல் கலஹா பொதுச் சந்தையின் கோழி இறைச்சிக் கடையறைகளுக்காக ரூபா 191,520 தொகை மற்றும் 2020 ஆண்டு முதல் தெல்தொட்ட மீன்கடைக்காக ரூபா 155,833 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அதே போல் நீண்டகாலத்திற்காக டென்டரின் மூலம் வழங்கியிருந்த 03 கடைகளில் இருந்து 2013-2021 காலப்பகுதிக்கு உரிய நிலுவைக் கடை வாடகை ரூபா 414,710 தொகை காணப்பட்டது. | தற்போது அறவிடப்பட்டு வருகின்றது என. | வருமானம் அறவிடப்பட வேண்டும். |

**(இ) ஏனைய வருமானங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 18,550,388 தொகையாக காணப்பட்டதுடன் ஒரு நுகர்வோரிடம் ரூபா 10,000 இனை மிகைத்துள்ள நீர் நுகர்வோர் 824 பேரிடம் ரூபா 6,000,311 தொகையாக இருந்தது. | நடமாடும் சேவைகள் நடாத்தி அறவிடப்படும் என. | நிலுவை மீதிகளை அறவிடப்பட வேண்டும். |
| (ii) | முதுன கடை நீர் செயற்திட்டம் 2012 ஆண்டில் நீர் வழங்கள் சபைக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் ரூபா 822,572 இற்கான நிலுவை நீர்க் கட்டணத்தை அறவீடு செய்வதற்கோ அல்லது சாட்டுவதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | நிலுவை மீதிகளை அறவிடப்பட வேண்டும். |

**(ஈ) நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,951,360 தொகை முத்திரைக் கட்டணம் ரூபா 119,529,130 தொகையாகும். | பாதீட்டு பணிப்பாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் தருவித்துக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆண்டில் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 09 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அடங்கக் கூடியவாறு ரூபா 70.39 மில்லியன் மதிப்பீடொன்றின் மீது வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த அங்கெலிபிடிய மொரகொல்ல நீர்செயற்திட்டத்திற்காக ரூபா 51.16 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 2018 ஆண்டு முதல் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் பெறுமதி ரூபா | ஏற்பாடுகள் போதியளவாக காணப்படவில்லை என. | குறிப்பிட்ட பணத்தை பெற்றுக் கொண்டு செயற்திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 19.2 மில்லியன் தொகை மேலும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டியிருந்தது. சபை அதிகாரப் பிரதேசத்தில் உக்கிரமமான குடிநீர் தட்டுப்பாடொன்று காணப்படுவதுடன் பொதுமக்கள் தீவிர நெருக்கடி நிலைமை காணப்பட்டது. அவ்வாறியினும் குறிப்பிட்ட செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் தற்போது செலவிடப்பட்டிருந்த ரூபா 51.16 மில்லியன் தொகை விளைவற்றுக் காணப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்காக ஒப்பந்தக்காரரினால் கொள்வனவு செய்திருந்த ரூபா 3,582,000 தொகை பெறுமதியான 04 நீர்ப்பம்புக்கள் மற்றும் ரூபா 2,587,000 பெறுமதியான மின்சாரம் வழங்கள் ஆகியவை விளைவற்றுக் காண்பட்டது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமான 02 நீர்ச் செயற்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த நீர் மாதிரி பரிசோதனை அறிக்கையின் படி ஈ கோலி (E Coli) பக்டீரியா செறிவு 2-16 வரையான வீச்சில் காணப்பட்டதுடன் கொலிபோம் (Coliform) பக்டீரியா 38-64 இற்கு இடைப்பட்டு காணப்பட்டது. இது தொடர்பாக கவனம் ஏதும் செலுத்தப்படாமல் குடிப்பதற்கு தகுதியற்ற அசுத்த நீர் பொதுமக்களுக்கு வினியோகிக்கப்பட்டிருந்தது. | மீண்டும் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுத்தமான நீர் வினியோகிக்கப்பட வேண்டும். |
| (இ) | 1987 இன் 15 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 93 (ஆ) ஏற்பாடுகளின் படி பிரதேசத்தில் வீடுகளின் மலகழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக முறைப் பிரகாரம் கிடங்குகள் குறிப்பிட்ட காலப் பகுதியில் சுத்தம் செய்தல் மற்றும் காலியாக்கக் கூடியவாறு சாக்கடை வண்டி சேவையொன்று பேணிச் செல்ல வேண்டும். | துணைச் சட்டமொன்றின் மூலம் தழுவியிருக்கவில்லை என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 5,808,200 இற்கான நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் மீதிகள் காணப்பட்டதுடன் அவற்றில் 1 | ஆளுனரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருடத்திற்கும் 3 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,500,000 தொகை காணப்பட்டது. | | |
| (ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுகின்ற 08 நீர்ச் செயற்திட்டங்கள் தொடர்பாக 3600 நீர் நுகர்வோர் காணப்பட்ட போதிலும் அவற்றில் 511 நுகர்வோருக்கு மாத்திரம் நீர் மானிகள் பொருத்தப்பட்டிருந்ததுடன், சரியான நீர் கட்டண அறவீடொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | அடுத்த வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நீர் மனு பொருத்தி கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) 2009 மற்றும் 2020 ஆண்டுகளுக்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 21,990,425 தொகை மற்றும் 2008 ஆண்டு தொடர்பாக ரூபா 130,337 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அட்டவணைகள் சமர்ப்பிக்கும் படி குறிப்பிட்ட தரப்பினரை அறிவுருத்தப்பட்டது என. | வருமானம் பெற்றுக் கொள்வதற்கு அல்லது தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) நகர அபிவிருத்தி அதிகார சபை கணக்கில் காணப்பட்ட ரூபா 7,529,934 இற்கான தொகை அதிகார சபையை வினவி பிரதேச அபிவிருத்தி அலுவல்களுக்காக ஈடுபடுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அபிவிருத்தி அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்படும் என. | அபிவிருத்தி அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (உ) தலாதுஓய நகரத்தின் இலக்கம் 03 கடையறை அமைந்துள்ள காணியின் சட்டரீதியான தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கவில்லை. | உரிமை அரசிற்கு சொந்தமாக காணப்படுவதுடன் வாடகையை அதிகரித்த போது பணம் செலுத்தப்படவில்லை என. | சபைக்கு காணப்படும் சட்ட ரீதியான உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வியாபார, வர்த்தக மற்றும் சுற்றுலா திணைக்களத்தின் ஏற்பாடுகளில் ரூபா 4,812,538 தொகை மற்றும் சபை நிதியத்திலிருந்து ரூபா 1,258,000 தொகையாக ரூபா 6,070,538 தொகை செலவிடப்பட்டு மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய காணி ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த லுல்கந்தர சுற்றுலா நிலையம் மற்றும் அந்த | குறிப்பிட்ட நிறுவனத்தை அறிவுருத்தப்பட்டது என. | உரிமையை உரித்தாக்கிக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணியை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 19,652,781 இற்கான 28 காணிகளின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிமையை உரித்தாக்கிக் கொள்ள வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியை இணக்கஞ் செய்ய போது அவற்றில் 11 பதவிகளில் 25 வெற்றிடங்களும் 01 பதவியில் 11 மிகைகளும் காணப்பட்டது. | வெற்றிடங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மிகைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகும் என. | வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். |
| (ஆ) | 2014 முதல் மீளாய்வாண்டு தொடர்பாக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, இறந்துள்ள உத்தியோகத்தர் ஒருவரின் மற்றும் மூன்று தொழிலாளர்களின் கூட்டுத்தொகை ரூபா 231,665 இற்கான கடன் மீதியொன்று அறவீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன் அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் விதிகளின் படி சபையினால் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகள் இனங்கண்டு அவற்றை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது என. | குறிக்கோள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்த வேண்டும். |